www.padippakam.com

Kayon

இலங்கையில் செய்தி இதழாகப் பதிவுசெய்யப்பட்டது.

# தொழிலாளர் பாதை

விலை 2/50

★ மாதமிரு இதழ் ★ இதழ் 390 ★ 1989 ஜனவரி 30 வெள்ளிக்கிழமை

உள் பக்கம்


- 2ம் பக்கம் — ஐக்கிய முன்னணி ஒன்றைக் கட்டியெழுப்ப ஒன்றிணைக!
- 3ம் பக்கம் — தோழர். ஆர்.ஏ. பிட்டவெலவின் நினைவு நீடூழி வாழ்க!
- 5ம் பக்கம் — நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் முன்னோக்குகளின் தீர்மானம்.


# இப் பொதுத் தேர்தலில் வாக்களிப்பை தவிர்ப்பதே தொழிலாள வர்க்க விதிமுறை!

## பு.க.க. அரசியல் குழு அறிக்கை!

சமசமாஜ- கம்யூனிஸ்ட் - நவ சமசமாஜ கட்சிகள் முதலாளித்துவ ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியுடனும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் யூ.என்.பியுடனும், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடனும் முதலாளித்துவ மக்கள் முன்னணியை உருவாக்கிக் கொண்டு, தத்தம் கட்சிகளின் தேர்தல் சின்னங்களையே ஒதுக்கித் தள்ளியதன் மூலம் கட்சிகளின் அடையாளங்களையே சிதைத்து போகச் செய்துள்ளன. இந்த இலட்சணத்தில் பொதுத் தேர்தலில் நிற்பதன் மூலம் தொழிலாள வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் முதலாளித்துவ ஆளும் வர்க்கக் கட்சிகளுக்கு எதிராக தமதுவாக்கினை பிரயோகிக்கும் சந்தர்ப்பம் தவிர்க்கப்பட்டுள்ளது.

முன்னைய தேர்தல் தொகுதி முறையினை நீக்கி நிர்வாக மாவட்டங்களின் அடிப்படையில் தேர்தல் நடாத்துவதன் மூலம் தொழிலாள வர்க்கம் சுயாதீனமானமுறையில் தமது பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்ய இருந்து வந்த வரையறுக்கப்பட்ட வாய்ப்பினைக் கூட யூ.என்.பி அரசாங்கம் ஒழித்துக் கட்டியுள்ளது. தோட்டத்துறையிலும் நகர்ப்புறத்திலும் திரண்டுபோயுள்ள தொழிலாளர்கள் இன்று ஒரு மாவட்டம் பூராவும் சிதறி, பொது மக்களிடையே கரைந்து தமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக போராடும்படி நெருக்கப்பட்டுள்ளனர். இதன் பிரகாரம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தனது அபேட்சகர்களை இத் தேர்தலில் நிறுத்தும் வாய்ப்பு இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையாளர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக குறிப்பிட தொடர்ந்து மறுத்து வருவதன் மூலம் இக் கஷ்டம் மேலும் உக்கிரம் கண்டது.

இந் நிலைமையில் வாக்களிப்பை தவிர்க்கும்படி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களை வேண்டிக் கொள்கின்றது.

### தமிழ் ஈழத்தில்

தமிழ் தேசிய இனத்தினரின் தாயகமான வட-கிழ் மாகாணங்களில், தேர்தல் இந்திய ஆக்கிரமிப்புப் படைகளின் ஆதிபத்தியத்தின் கீழ் இடம் பெறுகின்றது. ஏகாதிபத்தியத்தின் சார்பில் தமிழ் தேசிய இனத்தினரின் சுயநிர்ணய உரிமையை முழுமையாக நசுக்கி, இந்தியத் துணைக்கண்டத்தில் தமது பொலிஸ்கார வேலையை உச்சிக்குக் கொண்டுவந்த இந்திய முதலாளித்துவ ஆட்சியாளர்களதும், சிங்கள இனவெறியர்களதும் பிற்போக்கு திட்டங்களுக்கு ஓர் அங்கீகாரமாக்கிக் கொள்ளச் கூடிய இந்த தேர்தலை பகிஷ்கரிப்பதே தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்துக்கு நல்ல நிலைமைகளை சிருஷ்டிக்கும். ஆதலால் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்த பொதுத் தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி தமிழ் தேசிய இனத்தினரை வேண்டுகின்றது.

முதலாளித்துவ ஆளும் வர்க்கம், தாம் பிணைந்து கொண்டுள்ள ஏகாதிபத்திய அமைப்பின் நெருக்கடி உக்கிரமடையும் வேக விகிதாசாரத்துக்கு ஏற்ப 1947ல் நிறுவிய பாராளுமன்ற ஆட்சி முறையினை ஒழித்துக்கட்ட நடவடிக்கை எடுத்தது. இவை இராணுவ-பொலிஸ் சர்வாதிகாரத்தை நோக்கி மாற்றமடையும் வேலைத்திட்டத்துடன் சேர்ந்து நடைபெற்றது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை நிலைநிறுத்தும் 1978ம் ஆண்டு அரசியலமைப்பு சட்டத்தின் படி பாராளுமன்றம் அதன் உறுப்பினர்களின் விருப்பின் படி அன்றி ஜனாதிபதியின் இச்சையின் பேரில் ஆடும் பொம்மை மண்டபம் ஆகியது. பாராளுமன்ற உறுப்பினர்களின் இராஜினாமா கடிதங்களை ஜனாதிபதி தனது கரங்களுள் திரட்

★ 2ம் பக்கம் பார்க்க

# கிருஷ்ணனந்தன், அண்ணாமலை படுகொலைகளை கண்டனம் செய்!

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் நீண்டகால ஆதரவாளரும் பிரபல பொருளியியல் விரிவுரையாளருமான தோழர். என். கிருஷ்ணனந்தனும் நவ சமசமாஜக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினரான ஏ. கே. அண்ணாமலையும் படுகொலை செய்யப்பட்டதை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வன்மையாகக் கண்டனம் செய்கின்றது.

இந்திய ஆக்கிரமிப்பு படைகளின் முகாம்களில் இருந்து தொழிற்பட்டுவரும் ஈ.பீ.ஆர்.எல்.எப். கூலிப் படைகளினால் 'விக்னா' கல்வி நிலையத்தில் இருந்து பலாத்காரமாக வெளியே இழுத்துச் செல்லப்பட்ட தோழர். என். கிருஷ்ணனந்தன் 1988 நவம்பர் 12ல் நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில் மூன்றலில் வைத்து தலையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.



என். கிருஷ்ணனந்தன்

அண்ணாமலை, 1989 ஜனவரி 10ம் திகதி கொழும்புத் துறையில் உள்ள அவரது இல்லத்தில் தனிப்பட்ட பயங்கரவாதத்துக்கு பலியாகி உள்ளார். "[illegible] விடையின்படியும் இது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் செய்யப்பட்ட ஒரு படுகொலையாகவே தெரிகிறது' என நவ சமசமாஜக் கட்சியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக ஆதரவாளரான என். கிருஷ்ணனந்தனைப் போலவே ஏ. கே. அண்ணாமலையின் படுகொலையும் வட-கீழ் மாகாணங்களில் வளர்ச்சி கண்டுள்ள மிகவும் தீர்க்கமானதும், ஆபத்தானதுமான அரசியல் நிலைமையைச் சுட்டிக் காட்டுகின்றன. நான்கு ஆண்டுகால காட்டுமிராண்டித்தனமான இனவாத யுத்தத்தின் பின்னர் இலங்கைச் சிங்கள முதலாளி வர்க்கம் 1987 ஜூலை 29ல் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு, தமிழ் விடுதலை இயக்கத்தை சின்னாபின்னமாக்கும் பாருட்டு இந்திய ஆக்கிரமிப்புப் படைகளை தருவித்தது பல்லாயிரம் அப்பாவி தமிழ் மக்களையும் விடுதலைப் போராளிகளையும் கொன்ற இப்படைகள் மேலும் பல்லாயிரக்கணக்கானோரை படுகாயங்களுக்கு உள்ளாக்கியது. இலட்சக்கணக்கானோரை உறைவிடமின்றச்செய்து வட-கீழ் மாகாணங்களில் ஆக்கிரமித்துக் கொண்ட இப் படைகளின் தாக்குதல்கள் இன்னமும் தொடர்கின்றன. இந்த இந்தியப் படைகள் முழுப் பிராந்தி

★ 11ம் பக்கம் பார்க்க

## வடக்கு கிழக்கிலிருந்து இந்திய — இலங்கை இராணுவத்தை அகற்று!

படிப்பகம்

www.padippakam.com



# ஐக்கிய முன்னணி ஒன்றைக் கட்டியெழுப்ப ஒன்றிணைக!

**அனைத்துலக அமைப்புகளும் சமசமாஜ கட்சி கிளையும் தொழிற்சங்க கிளைகளும் கோருகின்றன.**

முதலாளித்துவ யூ.என்.பி. அரசாங்கத்தினால் தயாரிக்கப்படும் இராணுவ–பொலிஸ் திட்டங்களுக்கும், மக்கள் விடுதலை முன்னணியின் பாசிச தாக்குதல்களுக்கும் எதிராக, தொழிலாள வர்க்கத்தை ஐக்கிய முன்னணி செயல்களில் அணிதிரட்டல் அவசியமென புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சமர்ப்பித்த யோசனைக்கு அனைத்துலக ரீதியிலும் இந் நாட்டு தொழிலாள வர்க்கத்தினுள்ளும் பெரும்வரவேற்பு கிடைக்க ஆரம்பித்துள்ளது.

பு.க. கழகத்தின் தீர்மானத்தினை ஏற்குமாறும் அதனடிப்படையில் திட்டவட்டமாக செயற்படுமாறு தமது கட்சித் தலைமைகளை கோருவதாகவும் இலங்கை சமசமாஜ கட்சி கிளையொன்றிலிருந்து நமக்கு கடிதமொன்று கிடைத்துள்ளது. யூ.என்.பி. அரசாங்கத்தில் இராணுவ தயாரிப்பு பற்றியும், ஏகாதிபத்திய வாதிகளதும், தேசிய முதலாளிகளதும்வர்க்க ஆட்சியை பேணச் செயற்படும் மக்கள் விடுதலை முன்னணியின் பாசிச தாக்குதல் பற்றியும் குறிப்பிடும் அக் கடிதம் பு.க கழகத் தோழர்கள் இருவர் உட்பட தொழிலாள வர்க்க அமைப்புகளின் தலைவர்கள் செயலூழியர்களையும் மக்கள் விடுதலை முன்னணி கொலை செய்தது பற்றியும் சுட்டிக் காட்டுகின்றது.

''இந் நிலைமையில், தொழிலாளவர்க்க அமைப்புகள், அச்சகம், அலுவலகம், தலைவர்கள், அங்கத்தவர்கள், வேலைத்தல தொழிலாளர், தொழிலாளர் வாழுமிடங்கள், வறிய விவசாயிகள், ஒடுக்கப்படும் தமிழர் என்போரை பாசிஸ்டுகளதும், அரச தாக்குதலிருந்தும் பாதுகாக்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்க தொழிலாள வர்க்க அமைப்புகளுள் ஐக்கிய முன்னணியொன்றை கட்டியெழுப்பவும் ஐக்கியமாக செயற்படவும் உங்கள் அமைப்பு எடுத்துள்ள தீர்மானம் மிகவும் முக்கியமானதென நாம் கருதுகிறோம். ஆயுதபாணியாக்கப்பட்ட தொழிலாளர் பாதுகாப்பு படையொன்றை கட்டியெழுப்புவது மிக இன்றியமையாததாகும். தொழிலாளவர்க்கத்தை ஊக்கப்படுத்த வர்க்க செயற்பாடுகளை அமைப்பதும் பொது வேலை நிறுத்தத்தை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதும் அவசியமாகும். சகல தொழிலாள வர்க்க அமைப்பு, வறியவர்களது அமைப்பும் இத் தொழிலாள வர்க்க ஐக்கிய முன்னணியை கட்டியெழுப்ப ஒத்துழைக்க வேண்டியது அவசியம்'' என்று அக்கடிதம் மேலும் குறிப்பிடுகிறது.

பாசிஸ்டுகளின் இலக்கினை போன்றே யூ.என்.பி. அரசாங்கத்தின் தாக்குதல் பற்றியும் மேலும் இங்ஙனம் குறிப்பிடுகையில் அது பின்வருமாறு கூறுகிறது;

''மக்கள் விடுதலை முன்னணியின் இச் செயல்கள் பாசிச வேலைத்திட்டமேயாகும். இந்த பாசிஸ்டுகளின் நோக்கம்: தொழிலாள வர்க்க அமைப்புகளை தகர்த்துவிட அதிகாரத்தை கைப்பற்றுவதேயாகும். இதன் மூலம் ஏகாதிபத்தியவாதிகளதும் முதலாளிகளதும் நெருக்கடியின் முழுச் சுமையையும் தொழிலாள வர்க்கத்தின் மீது திணித்து நசுக்கி சுரண்டவல்ல நிலைமையை தயாரித்து விடுவதேயாகும்.

''தமிழர் எதிர்ப்பும் இந்திய எதிர்ப்பினூடாக இனவாதத்தை தூண்டுவதும் இதற்கே: மக்கள் விடுதலை முன்னணியின் ஆத்திரமூட்டலை பயன்படுத்தியவாறு யூ.என்.பி. அரசாங்கம் தொழிலாளருக்கும் ஏனைய ஊழியருக்கும் மரண தண்டனை விதிக்கும் மிரட்டல் மூலம் துப்பாக்கி முனையில் வேலைவாங்கியதை கண்டோம்.

யூ.என்.பியின் புதிய தலைவரான ஆர். பிரேமதாச ஜனாதிபதி பதவிக்கு தெரிவான பின்னர் இந்நிலைமை கீழ்ப்படுத்தப்பட்டுவிட்டதாக எவராவது கருதின் அதுமிகவும் தவறாகும். ஆர். பிரேமதாச மக்கள் விடுதலை முன்னணி பாசிச தலைமைகளிடம் கை நீட்டியுள்ளார். பாசிஸ்டுகளை தொழிலாள வர்க்க இயக்கத்திற்கும், தமிழ் மக்களுக்கும் வறியவர்களுக்கும் எதிராக பயன்படுத்துவதற்கு அவர் தயாராகினார் என்பதே இதன் அர்த்தமாகும்.''

ஹேஸிங் நிறுவனம்: ஐக்கிய ரப்பர் மோட்டார் கருவிகள் தொழிலாள அமைப்பு கிளையொன்று எமது தீர்மானத்துக்கு ஆதரவளிக்குமாறு தாய்ச் சங்கத்தின் தலைமைகளுக்கு கடிதமனுப்பியுள்ளது.

இதற்கு முன் மத்தியவங்கி ஊழியர் சங்கமும் கூட்டுத்தாபன, வர்த்தக ஊழியர் சங்க கிளையும் பு.க. கழக தீர்மானத்திற்கு தமது ஆதரவை வழங்கி கடிதம வரைந்துள்ளன.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக ஐக்கிய முன்னணி தீர்மானத்திற்கு காட்டப்படும் இந்த நடைமுறை ஆதரவானது அரச அடக்கு முறைக்கும் பாசிச தாக்குதலுக்கும் எதிராக எழுச்சியுறும் தொழிலாள வர்க்கத்தின் தேவையையே சுட்டிக் காட்டுகிறது. தொழிலாள வர்க்கமானது முதலாளித்துவ பாசிச தாக்குதல் முன்னிலையில் அடிபணிய எந்தவகையிலும் தயாரில்லை என்பதையும் தலைமைத்துவம் கிடைத்தால் எதிர்ப்புரட்சிகர சக்தியை நடுக்கிவிட முன்வரத் தயாரென்பதும் இதன் மூலம் வெளிப்படுத்தப் படுகிறது.

எதிர்வரும் பொதுத்தேர்தல் பிரசாரத்தின் பின்னணியில் தொழிலாள வர்க்க, விவசாய மக்கள், ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கெதிராக தயாரிக்கப்பட்ட தாக்குதல் தொடரொன்றே அபிவிருத்தியுறுகிறது. ஏகாதிபத்திய வாதிகளதும் இலங்கையின் பிற்போக்கு முதலாளிகளதும் தேவைகளுக்கிணங்க இத் தாக்குதலை கட்டவிழ்க்க தயாராகும் ஜனாதிபதி ஆர். பிரேமதாச பாசிச மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவை தன் பக்கம் வென்றெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். ஜனாதிபதி பிரேமதாச அண்மையில் அவசர கால சட்டத்தை நீக்கியமையும் அரசியல் கைதிகளை விடுதலை செய்தமையும் ஊரடங்கு சட்டத்தை நீக்கியமையும் ஜனநாயகத்தை ஏற்படுத்துமுகமாக செய்யப்பட்டவை அல்ல. பாசிச ம.வி. முன்னணிக்கு ஆதரவளித்து அதனுடன் கொடுக்கல் வாங்கலாக ஒன்றுக்கு செல்லும் நோக்குடனேயாம்.

ஐக்கிய முன்னணி செயற்திட்டத்தை அமுல் படுத்தும் பொருட்டு பு.க கழகம் செய்த தீர்மானத்தை முற்றாக கைதவியுள்ள சமசமாஜ, கம்யூனிச, நவ சமசமாஜ தலைமைகள் பொதுத்தேர்தலினால் பலமான எதிர்க்கட்சியொன்று ஏற்படுத்தப்படவும் ஜனநாயகத்தை பேணவும் முடியுமென்றும் அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு அவை தடையாக விளங்குமெனவும் கூறிக் கொள்கின்றன.

தொழிலாள வர்க்கம் சுய அமைப்புகளை ஐக்கிய முன்னணியில் இணைந்து ஐக்கிய செயற்பாடுகளூடாக அரசாங்கத்தினதும் ம.வி. முன்னணியினதும் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டும். வறிய விவசாயிகளையும் தமிழ் இனத்தையும் அப் போராட்டத்தில் அணி திரட்ட வேண்டும்.

- ஆயுதபாணியான தொழிலாள படையை கட்டியெழுப்பிய வறிய விவசாயிகள், தமிழ் மக்களை இணைக்கவல்ல ஐக்கிய செயற்பாடுகளை தொடர்புபடுத்து முகமாக விழிப்பு குழுக்களை நிறுவுதல்;
- மறியல் போராட்டம் ஊர்வலங்களை ஒழுங்கு செய்தல்.
- பொது வேலைநிறுத்தத் தயார் செய்தல் என்பவற்றை ஐக்கிய செயற்பாடுகளாக புரட்சி கம்யூனிஸ்ட் கழகம் தீர்மானம் செய்துள்ளது.

ல.ச.ச. கட்சி–கம்யூனிச–நவ சமசமாஜ – இ.தொ.கா. அமைப்புகளின் தொழிலாளயு தற்போது சக தோழமையுள்ள அங்கத்தவர் ஆரம்பித்துள்ள பிரசாரத்தில் இணைந்து ஐக்கிய முன்னணி செயற்பாடுகளுக்கு உறுதியுடன் அணி திரளுமாறு கோருகின்றனர்.

தொழிலாள வர்க்கத்தின் இத்தகைய அணி திரட்டல், ஒடுக்கப்பட்ட, வறிய மக்களை அணி திரட்டல் யூ.என்.பி. அரசாங்க தாக்குதல் ம.வி.மு. பாசிச தாக்குதல்களிடமிருந்து பாதுகாப்பை பெறுவது மட்டுமல்ல, இந்த பிற்போக்கினை வேரோடழிக்க யூ.என்.பி. அரசாங்கத்தை புரட்டியடித்து தொழிலாள–விவசாய அரசாங்கத்தை நோக்கி முன் செல்லவல்ல நிலைமை சிருஷ்டிக்கப் பெறும்

---

## இப் பொதுத்தேர்தலில்..

★ 1ம் பக்கத் தொடர்ச்சி

டிக் கொண்டதன் மூலம் இது நன்கு அப்பட்டமாகியது.

### நம்பிக்கையீனம்

அத்தோடு 'சிட்' உறுப்பினர் முறையும் ஏற்படுத்தப்பட்டது. தேர்தல்களில் கள்ள வாக்களிப்பும், குண்டர் படை தாக்குதலும், நன்கு பரந்த அளவில் பாவிக்கப்பட்டது. இவை முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சிமுறை தொடர்பான ஆளும் வர்க்கத்தின் நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தியது.

இந்த இலட்சணங்கள் யாவும் முதலாளித்துவ ஆட்சியின் ஒரு கட்டத்தின் சாவைக் குறிக்கின்றது. அவ்வாறே அவை ஆழமான வர்க்க துருவப்படுத்தலையும் சுட்டிக் காட்டின.

தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும் ஒடுக்கியபடி கொண்டு நடாத்தும் முதலாளித்துவ ஆட்சியை பாராளுமன்ற திரையினால் மூடிமறைப்பது என்பது மத்தியதர வர்க்க குட்டி முதலாளித்துவ சமூக தட்டுக்களை தம்மைச் சூழ அணிதிரட்ட முதலாளி வர்க்கத்தினால் முடிந்தமட்டுமே சாத்தியமாகும். இதன் பொருட்டு கடந்த காலப்பகுதியில் நிலத்த வந்த பொருளாதார நிலைமைகள் இன்று முழுமனே சிதறுண்டு போய்விட்டது.

யுத்தத்தின் பின்னைய ஏகாதிபத்திய செழிப்பின் கீழ் கிடைத்து வந்த கடன் வசதிகள் இன்று நாட்டின வளங்களை உறிஞ்சும் பொறிக் கிடங்காகியுள்ளன. இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் நூற்றுக்கு 30% வீதம் இன்று கடன் மீள்ளளிப்புக்கும் வட்டிக்கும் செலவாகின்றது. இவை நாட்டின் விவசாய உற்பத்திகளின் விலை வேகமாக வீழ்ச்சி கண்டு கைத்தொழில் பொருட்களுக்கான சந்தை ஏகாதிபத்தியவாதிகள் கடைபிடித்து வரும் பாதுகாப்புவாதத்தின் பிடிக்குள் அகப்பட்டுப் போகும் நிலைமையிலாகும் இவை தொழிலாளர்களதும், ஏழைகளதும் வாழ்க்கைத் தரத்தினை பட்டினி நிலைமைக்கு தள்ளுவதோடு. கடந்த காலத்தில் பராமரிக்கப்பட்டு வந்த இடைநிலை சமூக தட்டினரையும் வறுமை நிலைக்குள் தள்ளிவிடுகின்றது.

ஜயவர்தனபுர பல்கலைக் கழக பேராசிரியர் எஸ். திசைரத்னவின் ஆய்வின்படி: 'வருமானம் உடைப்போரின் கீழ் தட்டினரில் நூற்றுக்கு 50 பேர் (25 இலட்சம் பேர்) தமது நிலையில் இருந்து கீழிறந்து போயுள்ளனர். 1973ல் முழு வருமா

★ 11ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# ...நதத்தின் ஓராண்டு!

---நந்சிங்

...இந்தப் பிரச்சனை அரசி ...ரீதியாக தீர்வு செய்யப் ...ராம் என்பதற்கான ...டை இந்த ஒப்பந்தம். ...முழுலுக்கு வந்தவுடன் ... நிர்வாகத்தில் குறிப் ...த்தக்க அதிகார பரவ ...கத்திற்கு இது வழி செய் ...''

...இதைச் சரியாக நடை ...றக்கு கொண்டு வருவ ...மூலம், அமெரிக்க ஏகாதி ...தியமும், அதன் அடி ...வற்றிகளும், உலகளாவிய ...ும் பிராந்திய மூல உபா ...ற்கான ஒரு தளமாக ...து நாட்டை உபயோகிக்க ...ளது அரசியல் மற்றும் ...ணுவ கட்டுபபாட்டை ...வவும, அண்டை இந்தி ...விற்கும் நமக்கும் முரண் ...ட்டான மோதல்களை ...ாற்றுவிக்கவு ம முனைவதை ...க்க முடியாது.''

...அமெரிக்க அரசின் வெளி ...வகார கமிட்டியின் உபகுழு ...பத்தல் இதைபற்றி ...வாதித்ததை நாம நினைவு ...வோம்.'' இந்தஒப்பந்தம் ...லங்காவின் நிலைமையில் ...மகத்தான மாற்றத்தை விளைவித்துள்ளதாக தெரிகிறது.''

''பிரதமர் ராஜீவ்காந்தி மற்றும் அதிபர் ஜெயவர்த்தன ஆகிய இருவரும் தங்கள் நாடுகளில்தோன்றிய எதிர்ப்புகளை மீறக் காட்டிய தைரியம்என்னை அசரவைத்து விட்டது அதனால் சிறிது முன்பு, வரும் ஆண்டில் அவர்கள் இருவருக்கும சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்க நோபல் பரிசு கமிட்டிக்கு சிபாரிசுக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளேன்.''

இப்பொழுது அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு அடியொற்றிகளாக யார் இருந்தார்கள் என்பது வெ—வெளிச்சமாகியிருக்கும் என்பதை ஒருவர் சுட்டிக் காட்ட முடியும். தமிழ் ஈழத்தை அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், அவர்களின் இந்திய சிறிலங்கா தேசிய பூர்ஷ்வா ஏஜெண்ட்களுக்கு காட்டிக் கொடுத்த துரோகிகள் சமசமாஜிஸ்ட்கள், ஸ்டாலினிஸ்ட்கள், மற்றும் நவ சமசமாஜிஸ்ட்கள் ஆவர்.


'' அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளும் அவர்களின் தோழமை நாடுகளும் தங்களது பூகோள மற்றும் பிராந்திய மூலோபாயத்திற்கானதளமாக நமது நாட்டை உபயோகப்படுத்தும் பொருட்டு, தங்களது அரசியல் மற்றும் இராணுவ மேலாதிக்கத்தை நிறுவ முற்சிகள் செய்வதை தடுப்பது இதனால் சாத்தியமாகும்.'' அமெரிக்க பாராளுமன்ற குழுவின் ஏகாதிபத்திய பிரதிநிதிகள் செய்த அரசியல் சதியாலோசனையான ஒரு பகுதியென்றும் இதை அக்குழுவே ஒப்புக் கொண்டது என்றும் கூறுகின்றனர்.

இதற்கிடையில் இந்திய ஸ்டாலினிஸ்ட்டுக் கட்சியான (CPI (M) ) சி.பி.எம். மற்றும் (CPI) சி. பி. ஐ. தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு இவ்வுடன்பாட்டை பாராட்டியதோடு தமிழ்விடுதலைப் போராட்டத்தைமேலும் ஒடுக்குவதை கோரினர். (CPI (M) ) சி. பி. எம்-இன் தலைவர் நம்பூதிரிபாட் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை விடுதலைப் போராட்டத்தை நடத்தும் முக்கியப் போராளிகளைத்தவிர வேறுயாருமல்லர்.

இதுதான் ஏகாதிபத்திய வாதிகள் விரும்பியதாகும். நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி அவர்கள் இந்திய முதலாளித்துவத்தினரிடம் 'இந்தியத் துருப்புகளின் இருப்பினால் அனைத்துக் கட்சிகளும் இவ்வுடன்பாட்டோடு உடன்படுமாறு செய்வதற்கு ஒரு உறுதிமொழியை வேண்டி வற்புறுத்தினர். குறைந்தபட்சம் அடுத்த 18 மாதங்களாவது எல்லாம் சாதாரணமாக நடைபெறும் அளவிற்கு தொடர்ந்து ஆயத்தம் செய்யுமளவிற்கு இந்தியாவை இதில் ஈடுபடுத்த வேண்டும்.'' என்று சோலார்ஸ் கூறினர். இது அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளும் இந்திய ஆட்சியாளர்களும் சேர்ந்து தமிழ் விடுதலைப் போராட்டத்தை 18 மாதத்திற்குள் அழிக்க செய்து கொண்ட ஒப்பந்தத்தை மோசமாக ஒப்புக்கொள்வதாகும்,

துள்ள மாயை, தமிழ் விடுதலை போராட்டத்தின் மீது பாய்ந்த அவர்களின் நம்பிக்கைத்துரோகத்தலையீட்டால் தூள் தூளாக நொறுக்கப்பட்டதோடு அல்லாமல், ஸ்டாலினிசவாதிகள் சமசமாஜிகள் ஜனநாயக ரீதியான ஏகாதிபத்திய எதிர்ப்பு வேலைத்திட்டத்திற்கு தோள் கொடுத்ததாக நடத்தப்பட்டு பாசாங்கும் வெளிப்பட்ட விட்டது

இத்தகைய நம்பிக்கைத் துரோகிகள், போருக்குப் பிந்தைய தீர்வுகளுக்கு ஏற்ப வளைந்து கொடுத்த பின்னர், இப்பொழுதுதேசியமுதலாளித்துவவாதிகளின் வழியாக ஏகாதிபத்தியத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தயாராகியுள்ளனர். இந்த மறுதலிப்புவாத அலை, பின்தங்கிய நாடுகளில், தேசிய விடுதலைக்காக போராடுதல் என்ற பாசாங்கை தோலுரித்து, தொழிலாள அதிகாரத்துவங்களை விழுங்கி வருகின்றது. இதற்குப் பின்னால் வர்க்கங்களுக்கு ஊடாக வேலை செய்வதற்கு எந்த இடமும் அளிக்காத முதலாளித்துவத்தின் சிக்கல் இறுகி வருகிறது. அதிகாரத்துவத்தினர் நேரடியாகவே எதிர் புரட்சிகர முகாமில் இடம் பெற்று விட்டனர்.



THE INDO-SRI LANKAN AGREEMENT

HEARING

SUBCOMMITTEE ON ASIAN AND PACIFIC AFFAIRS

COMMITTEE ON FOREIGN AFFAIRS HOUSE OF REPRESENTATIVES

**US Committee report admits imperialist authorship of Indo-Lanka Accord**

*"I was so impressed by the courageous willingness of Prime Minister Gandhi and President Jayewardene to overcome domestic opposition in both their countries, that I have just sent off a letter to the Nobel Peace Prize selection committee nominating both of them for the Nobel Peace Prize for the coming year.... I very much hope that the Nobel Peace Prize committee will give them the same kind of consideration that they gave to Menachem Begin and Anwar Sadat, following their role in bringing about the historic Camp David Agreement."*

— Congressman Stephen Solarz

## ஏகாதிபத்தியத்தின் ஸ்டாலினிச. திரிபுலாத பிரதிநிதிகள்

...இந்திய இலங்கை ஒப்பந்தத் ...க்கு கையெழுத்திட்டவர் ...ளைபற்றி நான்காம் அகிலத் ... அனைத்துலகக்குழுவின் ...றையும் அமெரிக்க சபை ... துணைக்குழுவின் தலைவர் ...பன் சோலார்ஸ் கூறு ...தையும் ஒப்பிட்டுப் பாருங்...

...பின்தங்கிய நாடுகளில் ...சிய முதலாளிகளின் திரிபு ...த மற்றும் பிற்போக்கான ...ம்சம், இந்த நூற்றுண் ...் எண்ணற்ற சோகமான ...னுபவங்களின் மூலமாக நிரு ...க்கப்பட்டது போதாது என்ற ...சத்தில், இந்திய-இலங்கை ...பந்தமும், இந்தியாவின் ...ழீழ ஆக்கிரமிப்பும் மற்று ...ரு கசப்பான பாடம்

...ராஜீவ், ஜெயவர்த்தனே ...யல்களில் ஏதாவது தனித் ...வம் உண்டு என்றால், அது ...வர்களின் சிறுமுஞ்சித்தனத் ...அளவிலும், இக்கூட்டுச் ...யில் அவர்கள் காட்டிய ...ட்டுத் தன்மையுமேயாகும். ...சிய முதலாளித்துவ துஷ்டர் ...ன் தேவலோகத்தில். ...த இரு கொலையாளிகளும் ...ாங்கேஷக், சதாத், ...ர்புட்டு போன்ற ஏகாதி ...திய அடிவருடிகளின் ...சையில் ஒரு இடத்தைப் ...ற்றுக் கொண்டனர் ஜெய ...ர்த்தன மற்றும் ராஜீவின ...ளைககள், இந்திய, ...லங்கை தேசிய முதலாளி ...ால் தங்கள் நாடுகளின் ...ன்னேற்றத்திற்கு எவ்வித ...் முற்போக்குப் பங்கும் ...கலாம் என்று இன்னும் ...த்திருக்கின்ற மாயையைத் ...பொடி ஆக்கியுள்ளது.'' ...இலங்காவின் நிலைமையை ...புரட்சிகர கம்யூனிஸ்ட் ...த்தின் அரசியல் பணி ...,'' நான்காம் அகிலத் அனைத்துலகக்குழுவின் ...கை, நவம்பர் 19, ..., Fourth Inter National —March 1988

போது தான் அவர்கள் இருவரையும் வரும் வருடத்திற்கான நோபல் பரிசிற்கு பரிந்துரை செய்து நோபல் பரிசு தேர்ந்தெடுக்கும் குழுவிற்கு கடிதம் அனுப்பியுள்ளேன் ...... மெனக்கம் பெகினும், அன்வர் சர்தாத்தும் கேம்ப் டேவிட் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதில் அவர்களின் பங்கின எவ்வாறு நோக்கிற்ரே அதேபோல இவ்விருவர்களின் பங்கினையும் நோபல் பரிசு தேர்வுக்குழு நோக்குமென எண்ணுகிறேன். இது அமெரிக்க ஏகாதிபத்தியகுழுவின் தலைவர் கூற்று

ஒன்றுக்கொன்று முற்றிலும் எதிரான இருவழிகளிலிருந்து வந்துள்ள இவ்விரு கூற்றுக்களும இந்திய ஆளும் வர்க்கத்தின் எதிர்ப்புரட்சிகரத் தன்மையை முழுமையாக அங்கீகரிக்கின்றன. அவர்களது வர்க்க நிலைப்பாட்டின்படி முந்தைய கூற்று அதை எதிர்க்கின்றது; இரண்டாவது அதை வரவேற்கின்றது.

ஏகாதிபத்திய சுரண்டல் காரர்களின் குழு தங்களது நம்பிக்கைத்துரோக ஏஜெண்டுகளின் உண்மையான பங்கு பற்றி விவாதித்துக் கொண்டிருக்கையில் அந்த கிரிமினல் பங்கை தொழிலாள வர்க்கத்திடையே மறைப்பதற்கு தொழிலாளர் இயக்கத்துள் தேர்ச்சி பெற்ற ஏஜெண்டுகள் தேவையாக இருந்தது. இதுதான். ஸ்டாலினிஸ்டுகளின் திருத்தல்வாதி இடைநிலவாதிகளின் பணியே யாகும். ஏகாதிபத்திய சதிகாரர்கள் இப்பண்பாட்டை நிலைநிறுத்த உதவிய கையோடு தொழிலாள இயக்கத்தைக் கட்டுப்படுத்த அதை ஏகாதிபத்திய எதிர்ப்பு எனும் தோலைப்போர்த்திக் கொண்டது.

மக்கள் முன்னணி

LSSP, CPSL மற்றும் NSSP போன்றவை முதலாளித்துவ SLMP யோடு சேர்ந்து இந்த உடன்பாட்டை ஒரு முன்னேற்ற பாதை என்று விவரித்து கூறிய கூற்றுனது:

...தங்கள் நாடுகளில் ஏற்... எதிர்ப்புகளையும் ...த்து பிரதமர் ராஜீவ் ...யும், அதிபர் ஜெயவர்த் ...யும் செயல்படும் மன ...

## இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏகாதிபத்தியத்தால் வரையப்பட்டது என்பாதை அமெரிக்க கமிட்டி அறிக்கை ஒப்புக்கொள்கிறது

''1947-ன் சுதந்திரத்திற்பிறகு ஏற்பட்ட ஒரு மிகப் பெரிய முன்னேற்றம் என்று ஆரவாரம் செய்தார். அவர் உடனடியாக இலங்கையின் ஸ்டாலினிசக் கட்சி தலைவர்களோடு - இவ் வுடன்பாட்டை ஆதரிக்கும் இருகட்சி உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டார். முன்னரே தீர்மானிக்க முடியாத இந்தவகையில் இத்துரோக ஒப்பந்தத்திற்கு ஆதரிக்க இணைந்து செயல்பட ஒப்புக்கொண்டன.

கிரெம்ளின் அதிகாரத்துவம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு முழு உபகண்டப் பகுதியில் ஏற்படுத்திக் கொள்ளும் உடன்பாட்டின் முக்கியமாகத்தான் குறிப்பாக சோவியத் அதிகாரத்துவம் ஆப்கானிஸ்தான் போர் புதைசேற்றிலிருந்து விடுபடு முகமாக இந்த ஒப்பந்தத்தை வரவேற்றனர்.

இத்துரோகிகள் இத்தோடு நிற்கவில்லை. தமிழ் விடுதலைப் போராட்டத்தை ஏகாதிபத்திய கொலைகாரர்கள் மூலம் ஒடுக்குவதை நிறைவேற்றுவதில் அதனுடைய தர்க்கரீதியான இறுதி முடிவுக்கு தொழிலாள வர்க்கத்தை கோரும்படி செய்தனர்.

,'ஒப்பந்தத்தைஎதிர்க்கும் எல்லா சக்தியினையும் நிராயுதபாணியாக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மிகவும் அவசியமானதாகும். பிரதேச அமைதியை நிலைநாட்ட இவர்களைச் செயலிழக்கச் செய்ய வேண்டும்.'' யார் இந்த சக்திகள்? அவர்கள் தமிழ்

ஏகாதிபத்தியப் பிணந்தின்னிப் பிசாசுகளுக்கு மற்றதூண்டுதல் தேவைப்படவில்லை. இந்தப்பங்கினை அவர்களின் LSSP, CP, NSSP துரோகிகள் கொலைகார எதிர்ப்புரட்சிகரத் திட்டத்திற்கு முற்போக்கு முலாம் பூசி, விரைவில் தொழிலாள வர்க்கத்திற்குள்ளேயே அதற்கு எதிராக செயல்படுத்துவதற்கு ஆகும் ஒன்றுபட்ட இலங்கை அல்லது ''புகழ் பெற்ற மற்ற இவ்வழகிய தேசத்தின் சமுதாய ஒழுங்கிணைப்புக்காக்'' என்றவற்றின் அடிப்படையில், இவ் எதிர்ப்புரட்சிகர பிசாசுகள் தங்களின் ஏகாதிபத்தியத் துடனான கூட்டை நிர்ணயப்படுத்தி தொழிலாள இயக்கத்தின் தலையில சுமத்தினர். இது 1947-ல் சுதந்திரம் என்ற போர்வையில், தேசிய முதலாளித்துவத்துடன் இணைந்து ஒருக்கப்பட்ட சிறிலங்கா மக்களின் மேல் ஏகாதிபத்திய வாதிகளால் திணிக்கப்பட்டதைப் போன்றதை அன்றிவேறொன்றுமில்லை.

இது 1945-ல் வெற்றிபெற்ற ஏகாதிபத்திய கொள்ளைக்காரர்கள் மற்றும் அவர்கள துரோகக் கூட்டாளிகளுடனும் சோவியத் அதிகாரத்துவம் டெஹ்ரான், யால்டா, மற்றும் போட்ஸ்டாம் நகரங்களில் செய்துகொண்டபோருக்குப்பிந்தைய உடன்படிக்கையின் ஒரு பகுதியாகும்.

ஆகவே இந்தத் துணைக்கண்டத்தில் முற்போக்கான ஏகாதிபத்திய எதிர்ப்பு ஒன்றை மிகுந்த பிரயாசைக்குப்பின்னர் விதைத்துள்ளதாக, இந்திய முதலாளித்துவம் விளைவித்

## உபகண்டம் கொதித்துக் கொண்டிருக்கிறது

தெற்காசிய துணைக்கமிட்டியின் தலைவரான ஸ்டீபன் சோலார்ஸ், கடைசியாக இரங்கூனில் காணப்பட்டார் தமிழ் விடுதலைப் போராட்டத்தை நசுக்கவும், சிறிலங்கா உழைக்கும வர்க்கத்தை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவும் உருவாக்கப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தச் சதியில் ஈடுபட்டு, ஓராண்டு நடந்தவுடனேயே, இந்த ஏகாதிபத்திய வாதிக்கு புரட்சியால் கொதித்துக் கொண்டிருக்கும் பர்மிய பூமியில் வேலை தலைககு மேல் இருந்தது.

1947 போருக்குப் பின்னர், ஏகாதிபத்தியங்கள் தங்களது இந்திய சொத்துக்களை நிர்வகிக்க ஏற்படுத்தியிருந்த அமைப்பிற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வெடித்திருக்கும புரட்சிகர நெருக்கடி, சாவு மணி அடித்துள்ளது.

கடந்த இருமாதங்களுக்கும் மேலாக, பாட்டாளி வர்க்கத் தலைமையில் திரண்டுள்ள, அடக்கு முறைக்கு உட்படுத்தப்பட்ட மக்கள் வெகுண்டு, முக்கிய நகரங்களின் தெருக்களைக் கைப்பற்றி, பூர்ஷ்வா அரசின் துருப்புகளை புறமுதுகிடச் செய்து அரசை முழுவதுமாக நிலைகுலைய வைத்துள்ளனர். அவர்கள் இரு இராணுவ ஆட்சியாளர்களை ராஜினாமாச் செய்ய வைத்தனர். மூன்றாவது நபருக்கும் இவ்வச்சுறுத் தலைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

அதனால் ஆளும் வர்க்கத்துடன் சேர்ந்து, மக்களின் முதுகில் குத்தவும், எதிர்ப் புரட்சி தீர்வு ஒன்று காணவுமான சதியில் ஈடுபட சோலார்ஸ் பர்மாவிற்குப் போக வேண்டியிருப்பதில ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஆனாலும், இந்திய-இலங்கை ஒப்பந்தம் முடிந்து ஒரு வருடத்திற்கு பிறகும், ஏகாதிபத்

★8ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



தியம் மற்றும் அதன் பிரதிநிதிகளின் பிரச்சினை குறைவதற்கு பதிலாக வெகுவாக அதிகரித்துள்ளது.

செப்டம்பர் 14 ஆம் தேதி. கொழும்பில் உள்ள இந்திய ஹைகமிஷன், ஜெயவர்த்தனே அரசிற்காக, தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக இருக்கும் விதத்தில், சிறிலங்காவின் வடக்கு, மற்றும் கிழக்கு பிராந்தியங்கள் இணைக்கப்பட்டு ஒரே பிராந்தியமாக்கப்படும் என்று அறிவித்தது. இதைத் தொடர்ந்து இந்திய அரசு, தமிழர் பகுதிகளில் போர் நிறுத்தம் செய்வதாக தன் விச்சையாக அறிவித்தது. இப்பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆளுமையை, ஒப்புக்கொள்ளும் பட்சத்தில். இந்திய பூர்ஷ்வாவுடன் ஒரு உடன்பாட்டிற்கு அவர்கள் தயாராக இருப்பதை நோக்கும்போது. இந்த போர்நிறுத்த ஏற்பாடு; இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஏற்க புலிகளுக்கு போடப்பட்ட ஒரு தூண்டில்.

இத்தகைய வடக்கு கிழக்கு இணைப்பானது தமிழ் ஈழத்தின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காது. இப்பகுதியில் இந்திய முதலாளித்துவத்துடைட ஆளுமையை ஏற்றுக்கொள்ளும் அடிப்படையில், தனியாக ஒருதமிழ மாநிலம் உருவாக்கப்பட்டாலும்கூட, தமிழ் ஈழ சுதந்திரத்தை சுவாசிக்க முடியாது.

2500 தமிழ் மக்களைக் கொன்ற பிறகு, அச்சிறிய நாட்டை அகதிகளாக மாற்றிய பிறகு, இந்திய முதலாளித்துவ வர்க்கம் இத்தகைய ஒரு வேஷம் போடுவதற்கு முக்கிய காரணம். இந்திய முதலாளித்துவத்தின் சிக்கலே இதற்கு முன்பு எப்பொழுதும் இல்லாத அளவிற்கு உயர்த்திய தமிழ் ஈழ மக்களின் உறுதியான தாக்குப்பிடித்தல் தான்.

எல், டி. டி, ஈ. ஐ தன் பங்காளியாக மாற்ற இந்திய முதலாளித்துவ வர்க்கம் கையாண்ட இந்தக் கடைசி நடவடிக்கை, சிறிலங்காவின் புதை சேற்றில் ஆழமாக ஊடுருவி ராஜீவ் காந்தி சிக்குவதை தடுக்கவில்லை. இதற்கில் ஜெயவர்த்தனே அரசின் பிடி நாளுக்கு நாள் தளர்ந்து வருவதால் அங்கும் ராஜீவ் காந்தி தனது துருப்புகளை அனுப்ப வேண்டும் கட்டாயத்தை எதிர்நோக்கவேண்டி வரும்.

கொழும்பின் கிழக்குப் பகுதியிலுள்ள பொமிலாவில், வாழ்வியல் உரிமைகளுக்காக வழக்காடும் வழக்குரைஞர் விஜிடேசா ல்யனராச்சி, போலீசாரால் கொலை செய்யப்பட்டது. கடுமையான பொதுமக்களின் எதிர்ப்பை பற்றவைத்துள்ளது. நகரமும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் அப்படியே ஸ்தம்பித்துவிட்டன. காட்டிக் கொடுக்கும் உழைக்கும் வர்க்கத்தலைவர்களின நம்பிக்கைத் துரோக கூட்டுச்சதித் திட்டங்களால் லாபம் அடைந்து கொண்டிருக்கும் சிங்கள இனவாத ஜே.வி.பி., இதற்குள் நுழைந்து இந்த எதிர்ப்பை தனது பிற்போக்கான நோக்கங்களுக்கு பயன்படுத்த முன்வந்துள்ளது. அரசாங்கம் இப்பொழுது இந்திய இராணுவத்தையே முழுவதும் நம்பியுள்ளது.

## புரட்சிகர நெருக்கடி

இந்திய, சிறிலங்கா பிற்போக்கு அரசுகளுடன் ஸ்டாலினிஸ்டுகள், திரிபுவாதிகள் மற்றும் இடைநிலைவாதிகள் ஆகியவர்களுடைய நேரடி கூட்டுச் சதியாலேயே, பர்மாவில் உள்ளதுபோன்ற புரட்சிகர நெருக்கடி சிறிலங்காவில் சமீப காலமாக கட்டுக்குள் வைக்கப்பட்டிருக்கிறது.

ஏகாதிபத்தியத்தால் நெய்யப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னால் உழைக்கும் வர்க்கத்தை கட்டிப்போட்டு விட்டதால், ஜே. வி. பி. போன்ற இனவாத சக்திகளுக்கு தினமும் திருவிழாவாகி விட்டது. எத்தனை நாட்களுக்கு உழைக்கும் வர்க்கத்தை இப்படி அடக்கி வைத்திருக்க இயலும்?

உழைக்கும் வர்க்கத்தின் தாக்குதல், ஆட்சியினருக்கு எதிராக வளர்ச்சியடையாவண்ணமும், பெருபவேகம் பெற்றுவந்த தமிழ் விடுதலைப் போராட்டத்துடன் அது பொருந்திவிடாமலும் தடுக்க 1985 லிலேயே அவர்கள் வகித்த பாத்திரம் பற்றி நாம் முன்பே குறிப்பிட்டிருந்தோம். சிறிலங்கா உழைக்கும் வர்க்கம் ஜெயவர்த்தனே அரசிற்கு எதிரான 1976, 1980 போராட்டங்களை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து போராட தீர்மானித்துள்ளனர் என்பது, இத்தீவில் தற்போது வெடித்துள்ள பரவலான தொழிலாளர்போராட்டங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

எஸ். எல். எப், பி.—சி.பி. கூட்டு அரசிற்கு சாவுமணி அடித்த 1976 பொது வேலை நிறுத்தம், உழைக்கும் வர்க்கத்தின் அதிகார பூர்வமான தலைமை எதினாலும் தூண்டப்பட்டு, வழிநடத்தப்படவில்லை; மாறாக இடைநிலைவாத ரயில்வே தொழிலாளர் சங்கங்களின், செயற்குழுவினால் நடத்தப்பட்டது. அந்தத் தொழிலாளர்கள் புதிதாக பதவியேற்றிருந்த யு. என் பீ. அரசை எதிர்த்து 1980ல் அதே முறையில் போராடினர் அந்த வருடத்தில் 300 000 தொழிலாளர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டதுதான் விளைந்த பயன்.


L S S P-C Pன் காட்டிக் கொடுக்கும் தலைவர்களுக்கு எதிரான போராட்ட தசன் வேலைநிறுத்தக்கின்போதும் அதற்குப் பின்னரும், உழைக்கும வர்க்கம் புரட்சிகர செயல்பாட்டின் அடிப்படையில். அதிகாரத்தை கைப்பற்ற வேண்டியிருப்பதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் சிறிலங்காப் பிரிவான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாளர்களுக்கு வேலைநிறுத்தத்தின் படிப்பினையை எடுத்துக் கூறியது. தமிழ விடுதலைப் போராட்டத்திற்கான நிபந்தனையற்ற ஆதரவு, ஜெயவர்த்தனே ஆட்சி பீடத்தை முறியடித்தல் உட்பட, சர்வதேச பாட்டாளி வர்க்க திட்டத்திற்காக போராடும் ஒரு புரட்சிகர கட்சியின் அத்தியாவசியத் தேவை என்பதுதான் அது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஜெயவர்த்தனே அரசை வீழ்த்த உறுதியுடன் தொடர்ச்சியாக போராடி வந்துள்ளது.

கடந்த மாதம், வங்கி ஊழியர்கள் சங்கத்தின் தலைமைக்கு புரட்சிகர டிராட்ஸ்கியிஸ்ட்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலானது, உழைக்கும் வர்க்கத்தினரிடையே மிகுந்த விழிப்புணர்வு பெற்ற ஒரு பிரிவு, கடந்த காலத்தில் இருந்து பாடம் கற்றுக் கொண்டு வர்க்கக் கூட்டு வைத்து காட்டிக்கொடுக்கும் தலைவர்களிடம் இருந்து பிரிந்து வருவதை சுட்டிக் காட்டுகிறது.

ஒரு காலத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பகுதிகளாக இருந்த அனைத்துப் பகுதிகளிலும் இத்தகைய புரட்சிகர கட்சியைக் கட்டி எழுப்புவதை இனியும் தள்ளிப்போட முடியாது என்று பர்மாவில் உள்ள புரட்சிகர நெருக்கடி சுட்டிக் காட்டுகிறது.

## கொந்தளிப்பில் துணைக்கண்டம்

இந்தப் பிராந்தியத்தில் ஏகாதிபத்தியம் கடுமையான நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. எல், டி.டி. இ. தலைமையின் சந்தர்ப்பவாத அரசியலுக்கு மத்தியில். தமிழ் ஈழ விடுதலைப் போராளிகள் உறுதியாக தாக்குப்பிடித்து



நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார ஜுன் 36, 1986ல் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டிற்கு வருகையில் ஜெயவர்த்தனேயால் வரவேற்கப்படுகிறார், அங்கே தொழிலாள வர்க்கத் தலைவர்கள் வழங்கிய ஆதரவு 1987ல் இந்திய ராணுவ தலையீட்டுக்கு முத்திரையாக இருந்தது. இடமிருந்து பின்னே இரண்டாவதாக நிற்பது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் கே. பி, சில்வா.

எதிர்த்து போராடிக்கொண்டிருக்கும சிறலங்காவில, ஏகாதிபத்தியத்தின் முக்கிய போலீஸான இந்திய முதலாளித்துவ வர்க்கம் ஆழம் தெரியாமல் காலை விட்டு முழித்துக்கொண்டிருக்கிறது ஏகாதிபத்தியத்தின் முதலாளித்துவ சதியின உற்பத்திப் பொருளான பங்களாதேஷ். இந்தியாவின் எதிர்ப்புரட்சி பரிவினைச் செயலாலும், காட்டிக்கொடுக்கும் பூர்ஷ்வாவின் செயலாலும், எனை விளையும என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு.

பாகிஸ்தானில் ஜியா—உல் ஹக்கின் இரத்தக்களரியான முடிவு. ஏகாதிபத்தியத்தின கருவியாக இருந்த ஒரு நாட்டில், அதன் வீழ்ச்சியை முன்னறிவிக்கிறது.

ஆனால் இப்பிராந்தியத்தில் உள்ள நெருக்கடியின முக்கிய குவிப்பு இந்தியாமீது விழுகிறது: இவ்வருடம் 6300 கோடி ரூபாய் என்று கணிக்கப்பட்டுள்ள அந்நியக் கடன்சுமையாலும், வளர்ந்து வரும் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகப் பற்றாக் குறையாலும, 10,000 கோடி வரவு-செலவு பற்றாக்குறைத் திட்டத்தாலும், இந்திய முதலாளித்துவ வர்க்கம தினசரி நடைமுறைச் செலவுகளுக்கே பணம் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கின்றது.

தேவையானவர்களாகி விட்டனர். நெருக்கடி மேலும் [illegible], இந்த நடபிக்கை துரோகிகளின் சேவை ஏகாதிபத்தியத்திற்கு

புதிய உயர் தொழில்நுட்ப தொழிற்சாலைகள், அந்நிய வருமானத்தை அதிகரிக்கும் என்ற ராஜீவ் காந்தியின் கணக்குகள் எதிர்பார்த்த பலனை அளிக்கத் தவறி விட்டது. மாறாக அவைகளுக்கு அளிக்கப்பட்ட வரி விலக்குகளாலும், அபரிமிதமான நிர்யாணிப்பு செலவீனங்களாலும், இருந்த சூழ்நிலை மோசமானதும், ஏற்கனவே வரவு-செலவுதிட்டத்தில் 17%க்குப அதிகமாக, இராணுவத்திற்கு செலவு செய்துவந்த இந்தியா, சிறிலங்காவல் தனதுதொடர்ந்த இராணுவக் தலையீட்டினால் அத கட்டுப்படுத்த முடியாத அளவு உயர்வதை தடுக்க முடியவில்லை.

திட்டவட்டமாக, இந்தக் காரியத்திற்காகத்தான் ஸ்டாலினிஸ்டுகள், திருத்தல்வாதிகள் மற்றும் இடைநிலைவாதிகள், இந்திய, இலங்கை ஒப்பந்தத்தை அமுலுக்கு கொண்டுவருவதில், ஏகாதிபத்தியத்திற்கு, மிகவும அத்தியாவசியமாகி விட்டது அதனால் தான் தொழிலாள அதிகாரதத்துவம், மக்களின் அடிப்படை ஜனநாயகத் தேவைக்கு எதிராக வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றது.

தொழிலாள அதிகாரத்துவத்தால, பின்தங்கிய நாடுகளல், தேசிய விடுதலையின் குறிக்கோள் உதறித் தள்ளப்பட்ட இந்த செயலானது, உழைக்கும வர்க்க இயக்கத்தை வரலாற்றின் முக்கிய கட்டத்தில் நிறுத்தியுள்ளது. ஏகாதிபத்தியத்தின் நுகத்தடியில மாட்ட, சிறிலங்கா தொழிலாளிகளை அழைத்துச் சென்ற, LSSP தலைமை வெற்றி கொண்டதை நாம் இங்கு நினைவு கூறுவோம். உலகப பொருளாதார நெருக்கடி புதிய கட்டத்தை அடைந்து கொண்டிருக்கையல், போருக்குப் பிந்தைய துண்டாடலுக்கு பிந்திய இந்தியாவின மீது உள்ள பிடிப்பை மறுவிநியோகம செய்ய, ஏகாதிபத்தியங்கள் தங்களுக்குள் வ்யாபாரப் போர் நிகழ்த்திக் கொண்டிருப்பது மிகவும் வெளிப்படையாகத் தெரிந்துகொண்டிருக்கையில், தேசியவிடுதலை என்பது உலக சோசலிசப் போராட்டத்தின் நேரடிப் பகுதியாக மாறுகிறது.

தொழிலாள வர்க்கத்தின் சர்வதேச ஐக்கியத்திற்குத் தானும் ஆதரவளிப்பதாக பாசாங்கு செய்து, 1947-ல் உருவாக்கப்பட்ட தேசிய முதலாளித்துவ அரசிற்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்ட LSSP அதிகாரத்துவ, இப்பொழுது ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்புரட்சி முகாமில் தன்னை நுழைத்துக் கொண்டுள்ளது. அதன் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் ஏஜெண்டுகள் மக்களின் நலனுக்கு எதிராகத் திரண்டுள்ளனா. இது எப்போதும தொழிலாள வர்க்கத்தில தலைமையை வெற்றி கொள்ள ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடி வந்த பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்களுக்கு இது புதியவழியைத திறந்துவிட்டுள்ளது.

ஆகவே இந்திய ஐக்கிய சோசலிச குடியரசுகளுக்காகப் போராட நான்காவது அகிலத்தின் கட்சியை மீண்டும் நிறுவ, இந்த உபகண்டத்தில் [illegible] பகுதிகளில் [illegible] ளது

(தொடரும்)

## சோசலிசத் தொழிலாளர் கழகத்தில் சேருங்கள்!

தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர டிராட்ஸ்கிசத் தலைமையைக் கட்டுங்கள். சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட இந்தியாவில் உள்ள டிராட்ஸ்கிச இயக்கமாகிய சோசலிசத் தொழிலாளர் கழகத்தில் உறுப்பினர் ஆகுங்கள்!

பெயர்.................................................

முகவரி.................................................

.................................................

நிரப்பிய பின் அனுப்ப வேண்டிய முகவரி :

தபால் பெட்டி எண் 968,

பெரம்பூர் பாரக்ஸ் சென்னை-600 012.

படிப்பகம்